சட்டத்தை எண்ணிக்கை அளவில் மற்ற மாநிலங்கள் அளவுக்குக் கூடத் தமிழ்நாடு பயன்படுத்தவில்லை என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்தியாவில் பல மாநிலங்களில் சில அரசியல் கட்சிக்காரர்கள் மட்டுமல்லாமல், பத்திரிகை ஆசிரியர்களும் பாதுகாப்புச் சட்டத்தின்படி கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். விசாரணையில்லாமல் பாதுகாப்பில் வைப்பது என்ற முறை ஒன்று, கைது செய்யப்பட்டவர்கள் தங்கள் நிலையை எடுத்துக் கூற அந்த முறையில் சந்தர்ப்பம் அளிக்கப்பட மாட்டாது. ஆனால், தமிழ் நாட்டில் இப்போது கைது செய்யப் பட்டுள்ள பத்திரிகாசிரியர்களை விசாரணையின்றிக் காவலில் வைக்கவில்லை. பாதுகாப்புச் சட்டப் பிரிவில் அவர்களைக் கைது செய்து வழக்குத் தொடரப்பட்டுள்ளதால், விசாரணைக்கு இடமுண்டு; குற்றம் சாட்டப்பட்டவர்கள் தங்கள் நிலையை விளக்க வாய்ப்பு உண்டு. ஏற்கெனவே உள்ள சட்டப் பிரிவில் வழக்குப் போடக் கூடாதா என்று கேட்கலாம். போர்க் காலத்தில் பாதுகாப்புக்கு விரோதமாக, எதிரிக்கு இடம் அளிக்கும் வகையில் அரசாங்கத்தையும் முதல்வரையும் சந்தேகிக்கக்கூடிய அளவுக்கு நடந்து கொள்கிறவர்கள்மீது பாதுகாப்புச் சட்டப் பிரிவைப் பயன்படுத்தி வழக்குப் போடுவது தவறல்ல. பாதுகாப்புச் சட்டம் பிரயோகிக்கலாமா என்று கேட்பவர்கள், நெருக்கடி நேரத்தில் அரசாங்கத்தையும் முதல்வரையும் நாட்டுக்குத் துரோகம் செய்கிறவர்கள் என்ற கருத்துப்பட எழுதியவர்களின் போக்கைப் பற்றி ஒரு வார்த்தை கூடக் கண்டிக்காதது வருந்தத்தக்கது.

இராஜாஜி அவர்கள் 'ஸ்வராஜ்யா', 'கல்கி' ஏடுகளில் எழுதியிருப்பது குறித்து டாக்டர் ஹாண்டே அவர்களும், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், திரு. லத்தீப் அவர்களும் அளித்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானங்களில் அவர்கள் விளக்கமளித்தபோது, ஹாண்டே அவர்கள், இராஜாஜி வேறொரு இடத்தில் இந்தியாவுக்கு அனுசரணையான கருத்து வெளியிட்டிருப்பதைச் சுட்டிக் காட்டினார்கள். பொறுப்பும், மதிப்பும் வாய்ந்த ஒரு பெரியவர் இப்படிப்பட்ட நெருக்கடியான நேரத்தில் இரண்டு கருத்துக்களை வெளியிட்டு, மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தியிருக்க வேண்டாம். பழம்பெரும் தேசபக்தர்கள் என்பதற்காகவே தேச விரோதமான கருத்துக்களை வெளியிட உரிமை பெற்றுவிட மாட்டார்கள். அதைப்போலத் தேசபக்தர் என்ற முத்திரை பெற்றவர்கள், மற்றவர்களின் தேசபக்தியைச் சந்தேகத்திற்கு உட்படுத்துவதற்கோ, இந்தியாவைப் பாதுகாக்க முனைந்து நிற்கும் ஒரு மாநில அரசின்மீது பழி போடுவதற்கோ உரிமையுள்ளவர்களாக இருக்க முடியாது. விமர்சனங்களை யார் செய்தாலும், அது நாட்டுப் பாதுகாப்புக்கு விரோதமாக இருந்திடக் கூடாது. சமாதான காலத்தில் எந்த ஒரு கருத்தைச் சொல்லவும், விமரிசனம் செய்யவும் அனைவருக்கும் உரிமையுண்டு. அதே உரிமையைப் பாதுகாப்பு நேரத்திலும் பயன்படுத்தி, எதிரிக்குச் சாதகமான கருத்துக்களை இங்குள்ள அரசுக்கு விரோதமாக வெளியிடுவது பாதுகாப்புச் சட்டப்படி குற்றமாகும்.

சாதாரண நேரங்களில் அரசைப்பற்றி, அமைச்சர்களைப்பற்றி எவ்வளவோ அவதூறுகள் வெளியிடப்படுகின்றன. அதுகுறித்து அவ்வப்போது வழக்குகள் தொடரப்பட்டும் இருக்கின்றன. ஆனால் இது அவசர நிலைப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள நேரம். இந்திய அரசும், மாநில அரசும் போருக்கான ஆயத்தங்களில் ஈடுபட்டிருக்கும்போது அந்த அரசுகளைப்பற்றி மக்கள் உள்ளத்தில் தவறான கருத்துக்களைப் பரப்பிப் போருக்கு மக்கள் தரும் ஆதரவு மத்திய, மாநில அரசுகளுக்குக் கிடைக்க முடியாமல் திசை திருப்புவதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க முடியாது. இந்த சட்டப் பிரச்சினையெல்லாம் இராஜாஜி போன்ற தலைசிறந்த நிர்வாகிகளுக்குத் தெரியாத விஷயமல்ல. எழுத்திலோ, பேச்சிலோ எப்படியோ சிக்கிவிட்டார்கள் என்ற நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, யாரையும் காவலில் வைக்க வேண்டுமென்பது இந்த அரசின் நோக்கமல்ல. முந்தைய அரசுகளின் நிலையோடு இந்த அரசை ஒப்பிட்டுப் பார்த்தால் எத்தனை வழக்குகள் திரும்பப் பெறப்பட்டுள்ளன, எத்தனை பேர் எச்சரித்து விடப்பட்டுள்ளார்கள்; எத்தனை போராட்டங்களில் கைது செய்யப்பட்டவர்களை உடனடியாக விடுவித்திருக்கிறோம் என்ற விவரங்களை எல்லாம் இந்தப் பேரவையும் அறியும், நாடும் அறியும்.

ஆகவே, தவறு விளைந்துவிட்ட பிறகு அந்தத் தவறைத் திருத்திக் கொள்கிற பெருந்தன்மை தவறு செய்தவர்களுக்குத் தேவை. அப்படிப்பட்டவர்கள்மீது இந்த அரசு, கடுமையாக நடந்து கொள்ளாது. அதற்கு இந்த அரசைப் பொறுத்தவரையில் பல எடுத்துக்காட்டுகள் உண்டு.

இந்தப் பிரச்சினையில் நாட்டின் பாதுகாப்பை, எல்லா வகையிலும் அரசாங்கம் கவனத்தில்கொண்டு நடந்து கொள்ளும் என்று கூறிக்கொண்டு, இந்த விளக்கத்திற்குப் பிறகு அவையை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று தலைவர் அவர்களே, தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு டாக்டர் ஹாண்டே, திரு. சே. டி. கே. தங்கமணி, திரு. எம். எ. லத்தீப் ஆகியோர் கொண்டு வந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கான அவசியம் இல்லை என்று கருதுகிறேன். ஆகவே, இந்த மூன்று ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கான அனுமதி மறுக்கப்படுகிறது.

(இ) மதுரையில் கல்லூரி மாணவர்களும் (ஆண்கள்) சென்னையில் பல கல்லூரி மாணவர்களும் செய்த படிப்பு நிறுத்தமும், கல்லூரிகள் மூடப்பட்டதும் குறித்து.

MR. SPEAKER : Thiru K. Kandaswamy has given notice of an adjournment motion under Rule 42 for the adjournment of the business of the House to discuss the following matter of urgent public importance, namely, the strike of the college students (men) and the consequent closure of colleges, in Madurai City likely to affect the peace in and around Madurai especially during the time of emergency.